# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:........................................................................... | 16 | T | I | |

**கவனிக்க:**

I.எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக

II. 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1),(2),(3),(4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

III. உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை (X) இடுக.

### பகுதி – I

**மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

1. இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாடு அழைக்கப்படுவது

   1. இபாதத்  2. முஆமலாத்  3. ஜினாயாத்  4. அகீதா

2. அகீதாவின் அடிப்படை மூலதாரங்களின் ஒன்று

   1. ஸுன்னா  2. கியாஸ்  3. இஜ்மா  4. இஹ்திஹாத்

3. "அர்ரூஹானிய்யாத்" என்ற பிரிவு உள்ளடக்குவது

   1. அல்லாஹ் பற்றியது  2. நபிமார்கள் பற்றியது
   3. மலக்குகள் பற்றியது  4. மறுமை வாழ்வு பற்றியது

4. "உமது ஆடைகளைச் சுத்தமாக வைத்திருப்பீராக" இவ்வசனம் இடம்பெறும் ஸூறா

   1. அலக்  2. முத்தஸ்ஸீல்  3. முஸம்மில்  4. பகரா

5. நபி இத்ரீஸ் (அலை) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஸுஹுபுகளின் எண்ணிக்கை

   1. 10  2. 20  3. 30  4. 50

6. அல்லாஹ்வினால் நபிமார்களுக்கு வழங்கப்பட்ட வழிகாட்டல்கள், போதனைகள் அழைக்கப்படுவது

   1. ரிஸாலத்  2. ஹிதாயத்  3. இபாதத்  4. இமாரத்

7. ஈமானின் கிளைகளில் உயர்ந்தது என **ஹதீஸில்** கூறப்படுவது

1. தொழுகை 2. ஸக்காத் 3. கலீமா 4. ஹஜ்

8. பூமியை வளப்படுத்தும் பணியானது

1. இபாதத் 2. இமாரத் 3. கிலாபத் 4. மஆத்

9. அகீதாவின் தூய்மையைப் பாதுகாக்க உழைத்த இமாம்

1. இமாம் அபூஹனீபா (ரஹ்) 2.இமாம் மாலிக் (ரஹ்)

3. இமாம் ஸாமி (ரஹ்) 4. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்)

10. தனது குடும்பத்தை பராமரிப்பது

1. பர்ளு ஐன் 2. பர்ளு கிபாயா 3. ஸுன்னத் 4. முபாஹ்

11. வணங்குதல், வழிபடுதல், கீழ்ப்படிதல் ஆகிய கருத்துக்களைக் கொண்ட அரபுச் சொல்

1. இபாதத் 2. இமாரத் 3. கிலாபத் 4. ஹிதாயத்

12. இஹ்லாஸ் என்பதன் பொருள்

1. வணங்குதல் 2. கீழ்ப்படிதல் 3. கட்டுப்படுதல் 4. தூய்மையான எண்ணம்

13. அத்தஹாரத் என்பதன் பொருள்

1. வணங்குதல் 2. சுத்தம் 3. கீழ்ப்படிதல் 4. ஒழுக்கம்

14. அல்குர்ஆனை தொகுப்பதற்கு ஆபூபக்ர் (ரழி) க்கு ஆலோசனை வழங்கியவர்

1. ஸைத் (ரழி) 2. ஹுதைபா (ரழி) 3 உமர் (ரழி) 4. உஸ்மான் (ரழி)

15. அல்குர்ஆனை மனனம் செய்த அதிகமான ஹாபிழ்கள் கொலை செய்யப்பட்ட யுத்தம்

1. பத்ர் 2. உஹத் 3. யமாமா 4. கந்தக்

16.''அல்மா உல் கஸீர்'' என்பது

1. குல்லதைனை விடக் கூடிய நீர் 2. குல்லதைனை விடக் குறைந்த நீர்

3. பயன்படுத்தப்பட்ட நீர் 4. பயன்படுத்த முடியாத நீர்

17. தேநீர், பன்னீர், போன்றவை உள்ளடங்குவது.

1. அல்லா உத்தஹீர் 2. அல்மா உத்தாஹிர்

3. அல்மாஉல் கலீல் 4. அல்மா உல்முதனஜ்ஜிஸ்

18. தற்போதைய ஹிஜ்ரி ஆண்டு

1. 1437 2. 1438 3. 1439 4. 1440

19. ''வரஉ'' எனப்படுவது

1. உலகப்பற்றற்ற வாழ்வு 2. பேணுதல்

3. பாவமன்னிப்பு 4. உளத்தூய்மை

20. ''ஜாமி உல்குர்ஆன்'' எனும் சிறப்புப் பெயரால் அழைக்கப்படும் கலீபா

1. உமர் (ரழி) 2. அலி (ரழி) 3. உஸ்மான் (ரழி) 4. அபூபக்ர் (ரழி)

21. கடைசி அத்தஹிய்யாத்துக்காக இருக்கும் இருப்பு

1. இப்திராஷ் 2. தவர்ருக் 3. இ∴திதால் 4. ருகூ∴

22. எதியோப்பியா என அழைக்கப்பட்ட நாடு

1. ஹபஷா 2. பலஸ்தீன் 3. மக்கா 4. மதீனா

23. முதன்முதலாக அருளப்பட்ட வஹியின் வசனங்கள் இடம் பெற்றுள்ள அத்தியாயம்

1. பலக் 2. அஸ்ர் 3. பாத்திஹா 4. அலக்

24. சமிக்ஞை, உதிப்பு என்ற பொருள்களைக் கொண்ட சொல்

1. இஜ்மா 2. ஹதீஸ் 3. அல்குர்ஆன் 4. வஹி

25. ''அல்மு∴னி'' என்பதன் பொருள்

1. பணக்காரன் 2. செல்வந்தனாக மாற்றுபவன்

3. கொடுப்பவன் 4. இரக்கமானவன்

26. ''நீங்கள் அளந்தால் பூரணமாக அளவுங்கள் சரியான எடையைக் கொண்டு நிறுங்கள்'' என்று கூறுவது

1. அல்ஹதீஸ் 2. அல்இஜ்மா 3. அல்குர்ஆன் 4. அல்கியாஸ்

27. ''தாருல் பனா'' என அழைக்கப்படுவது

1. மறுமை வாழ்வு 2. இவ்வுலக வாழ்வு
3. கப்ருடைய வாழ்வு 4. நெருக்கடியான வாழ்வு

28. ''ஸீரத் ரஸூலுல்லாஹ் எனும் நூலை எழுதியவர்

1. இமாம் புஹாரி 2. இமாம் முஹம்மத் பின் இஸ்ஹாக்

3. இமாம் முஹம்மது இப்னு அப்துல் மலீக் 4. இமாம் முஸ்லிம்

29. ஸுதைபிய்யா உடன்படிக்கை நிகழ்ந்த ஆண்டு

1. ஹி - 5 2. ஹி - 4 3. ஹி - 6 4. ஹி - 7

30. இரண்டாம் அகபா உடன்படிக்கையின் போது மதீனாவில் இருந்து வந்தவர்கள்.

1. 12பேர் 2. 100பேர் 3. 72பேர் 4. 60பேர்

31. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றிக் கூறும் நூல்

1. அர்ரஹீக் அல்மக்தூம் 2. புதூஹுல் புல்தான்

3. கிதாபுர்ரிஸாலா 4. அல்பிக்ஹுல் அக்பர்

Education கல்வி அධ්‍යාපන

32. இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியாவில் காணப்பட்ட சமூக அமைப்பு

1. தரீக்கா 2. கபீலா 3. ஷரீஆ 4. ஜஸீரா

33. மதீனாவின் பழைய பெயர்

1. ஷாம் 2. ஹபஷா 3. யத்ரிப் 4. மக்கா

34. ‘‘ஸீறா’’ என்பது

1. குர்ஆனின் ஓர் அத்தியாயம் 2. நபி (ஸல்) அவர்களின் ஹதீஸ்
3. ஸஹாபாக்களின் வரலாறு 4. முஹம்மது (ஸல்) அவர்களின் வரலாறு

35. மக்காவில் நபி (ஸல்) அவர்களின் இரகசியப் பிரச்சாரம் நடைபெற்ற இடம்

1. தாருல்ஹிக்மா 2. தாருல் அர்க்கம்
3. உக்காழ் சந்தை 4. ஸகீபது பனீஸா இதா

36. ‘‘கவ்லுஸ்ஸஹாபி’’ என்பது

1. குர்ஆனின் கூற்று 2. ஹதீஸின் கூற்று
3. துணை மூலாதாரம் 4. இமாமின் கூற்று

37. அல்மாஉல் முஸ்த.ஃமல் என்பது

1. குறைந்த நீர் 2. அதிக நீர்
3. பயன்படுத்தப்பட்ட நீர் 4. நஜீஸானநீர்

38. யஸ்ரிப்பில் இஸ்லாத்தைப் போதிப்பதற்காக நபி மூலம் அனுப்பப்பட்டவர்

1. முஆத் (ரழி) 2. உமர் (ரழி) 3. ஸைத் (ரழி) 4. முஸ்அப் (ரழி)

39. அரபு நாட்டிற்கு மேற்கே காணப்படுவது

1. செங்கடல் 2. அரபுக்கடல் 3. சிரிய பாலைவனம் 4. பாரசீக வளைகுடா

40. நிரல் A க்கு சரியானதை நிரல் B இல் இருந்து தெரிவு செய்க.

| A | B |
|---|---|
| 1. வஹிமத்லுவ் | a - கியாஸ் |
| 2.ஹதீஸ் | b - தூய எண்ணம் |
| 3.இ.ஃலாஸ் | c - அல்குர் ஆன் |
| 4.துணை மூலாதாரம் | d - ஸுன்னா |

1. bcda 2. dabc 3. abcd 4. cdba

(40X1 = 40 புள்ளி)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:10 | இஸ்லாம் | நேரம்:3.00 மணித்தியாலம் |
|---|---|---|

| சுட்டெண்:........................................................................ | 16 | T | II | |
|---|---|---|---|---|

**கவனிக்க:**

I.முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

II. முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட எனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும் 10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி II

**01.**

1. ஜபீரத் என்றால் என்ன?
2. உடலோடு தொடர்பான இபாதத்கள் இரண்டை எழுதுக?
3. குனூத் ஓதப்படும் சந்தர்ப்பங்கள் எவை?
4. நபி (ஸல்) அவர்கள் தொழுகையின் பின் ஓதிய **ஸூராக்கள்** எவை?
5. அல்அமீன், அஸ்ஸாதிக் என்பவற்றின் பொருள் யாது?
6. அன்புடன் தொடர்புடைய அல்லாஹ்வின் பெயர்கள் இரண்டைக் குறிப்பிடுக?
7. தாயின் சொல் தட்டாது கொள்ளைக்காரனிடம் உண்மை கூறியவர் யார்?
8. நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்கு முந்திய ரமழானில் ஜிப்ரீல் (அலை) எத்தனை தடவை குர்ஆனை ஓதிக்காண்பித்தார்கள்? அதைக் கேட்டவர் யார்?
9. ஜாஹிலிய்யாக்காலம் என்பதன் பொருள் யாது?
10. அல்லாஹ்வின் பால் மக்களை அழைக்கும் பணி எவ்வாறு அழைக்கப்படும்?

(2X10 = 20புள்ளி)

**02.**

1. இஸ்லாமிய வழக்கில் இபாதத் என்றால் என்ன?
2. தொழுகையின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக?
3. தொழுகையில் ஓதப்படும் பர்ளான ஓதல்கள் ஐந்தைக் குறிப்பிடுக?

(2+3+5 = 10புள்ளி)

**03.**

1. அன்பு வைத்தலின் இரு பிரிவுகளும் எவை?
2. ஸூரா புர்க்கானில் கூறப்பட்டுள்ள நற்பண்புகள் மூன்றைத் தருக?
3. பெற்றோருடன் அன்பு செலுத்தும் முறைகள் ஐந்து தருக?

(2+3+5 = 10புள்ளி)

**04.**

1.ஆன்மீக மேம்பாட்டுக்கான வழிகள் நான்கு தருக?

2. தவ்பா மூலம் கிடைக்கும் பயன்கள் மூன்றைக் குறிப்பிடுக?
3. ஆன்மீக மேம்பாட்டின் முக்கியத்துவத்தை விளக்குக?

(2+3+5 = 10புள்ளி)

**05.**

1. வஹியின் வகைகளைக் குறிப்பிடுக?
2. வஹியின் முக்கியத்துவங்கள் மூன்று தருக?
3. இஜ்மா மூலம் ஏற்படும் பயன்கள் எவை?

(2+3+5 = 10புள்ளி)

**06.**

1. கியாஸ் என்றால் என்ன?
2. துணை மூலாதாரங்கள் மூன்றினைத் தருக?
3. ஜாஹிலிய்யாக்கால சமூக அமைப்பை விளக்குக?

(2+3+5 = 10புள்ளி)

**07.**

1. ஜாஹிலிய்யாக்கால மக்களிடம் காணப்பட்ட மோசமான நடத்தைகள் நான்கைக் குறிப்பிடுக?
2. ஜாஹிலிய்யாக்காலப் பெண்கள் எவ்வாறான பணிகளில் அமர்த்தப்பட்டனர்?
3. நபி (ஸல்) அவர்களின் ஸீரா பாதுகாக்கப்படுவதற்கான காரணங்களைக் குறிப்பிடுக?

(2+3+5 = 10புள்ளி)

Education கல்வி අධ්‍යාපන

# இரண்டாம் தவணைப் பரீட்சை 2019

## இஸ்லாம் தரம் - 10

## (புள்ளித்திட்டம்)

### பகுதி - I விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 4 | 11. 1 | 21. 2 | 31. 1 |
| 2. 1 | 12. 4 | 22. 1 | 32. 2 |
| 3. 3 | 13. 2 | 23. 4 | 33. 3 |
| 4. 2 | 14. 1 | 24. 4 | 34. 4 |
| 5. 3 | 15. 3 | 25. 2 | 35. 2 |
| 6. 1 | 16. 1 | 26. 3 | 36. 3 |
| 7. 3 | 17. 2 | 27. 2 | 37. 3 |
| 8. 2 | 18. 4 | 28. 2 | 38. 4 |
| 9. 4 | 19. 2 | 29. 3 | 39. 1 |
| 10. 1 | 20. 3 | 30. 3 | 40. 4 |

Education கல்வி அධ්‍යාපන

**01.**

1. காயத்துக்கு இடப்படும் கட்டு / பிளாஸ்டர்
2. தொழுகை, நோன்பு, ஹஜ்
3. **ஸுபஹ்** தொழுகையின் போது

   ரமழானின் பதினாறாம் இரவு முதல் வித்ர் தொழுகையில்
4. ஸுசரத்துல் பலக், ஸுசரத்துல் அஹத், ஸுசரத்துல் நாஸ்
5. அல்அமீன் - நம்பிக்கையாளர்

   அஸ்ஸாதிக் - உண்மையாளர்
6. அர்ரஹ்மான், அர்ரஹீம், அல்வதூத்
7. முஹ்யித்தீன் அப்துல் காதிர் ஜீலானி
8. 2 தடவை ஸைத் இப்னுதாபித் (ரழி)
9. அறிவும் பண்பும் நிலவாத காலம்
10. த.்.வாப்பணி

(2X10 = 20புள்ளி)

**02.**

1. அல்லாஹ் ஏவிய விடயங்களை எடுத்து நடப்பதும் தடுத்த விடயங்களை தவிர்ந்து கொள்வதும் இபாதத் ஆகும்.
2. இஸ்லாத்தின் கடமைகளில் ஒன்று

   மறுமையில் முதல் விசாரணை தொழுகை பற்றியது

   அல்லாஹ்வின் அர்ஷில் வைத்து கடமையாக்கப்பட்டது.

   எச்சந்தர்ப்பத்திலும் விட அனுமதி கிடையாது.
3. ஆரம்ப தக்பீர்

   ஸூரத்துல் பாத்திஹா

   அத்தஹிய்யாத்

   நபிமீது ஸலவாத்து

   முதலாம் ஸலாம்

(2+3+5 = 10புள்ளி)

**03.**

1. அல்லாஹ்வின் மீது அன்பு வைத்தல்

   படைப்பினங்கள் மீது அன்பு வைத்தல்
2. பூமியில் பணிவாக நடத்தல்

   இரவில் கூடுதலாக வணங்குதல்

   விபச்சாரம் செய்யமாட்டார்கள்

   நடுநிலையில் செலவு செய்வார்கள்
3. பிள்ளைகள் பெற்றோருக்கு கட்டுபடல்

   அவர்களுக்கு மரியாதை செய்தல்

   அன்பாக நடத்தல்

   அவர்களைக் கவனித்தல்

   அவர்களுக்கு உதவி செய்தல்

(2+3+5 = 10புள்ளி)

**04.**

1. இ∴லாஸ், தவ்பா, வரஉ, ஸுஹ்த்
2. இறை நெருக்கம் கிடைக்கும்.

   நரகத்தில் இருந்து பாதுகாப்புக் கிடைக்கும்.

தீமைகள் நன்மையாக மாற்றப்படும்.

இவ்வுலகில் சுபீட்சமான வாழ்வு கிடைக்கும்.

3. உடலையும் உள்ளத்தையும் சமநிலையில் வைத்திருக்க வேண்டும்.

உடல் அழகாகவும் ஆன்மா அசிங்கமாகவும் இருக்கும் நிலையை இஸ்லாம் ஆதரிப்பதில்லை.

உடல் ஆன்மா இரண்டும் இணைந்ததாய் வாழ்வை அமைப்பவனே ஈருலக பயன்பாட்டை அடைய முடியும்.

(2+3+5 = 10புள்ளி)

**05.**

1. வஹிமத்லுவ், வஹிகைருமத்லுவ்
2. மனிதன் நேர்வழி பெறுவதற்கு

மனிதனுக்கு நன்மை, தீமை, சரி, பிழை பற்றிய தெளிவை முன்வைப்பதற்கு

மனிதனது புலன்களால் அறிய முடியாத பல விடயங்களை விளங்குவதற்கு

மனிதன் அல்லாஹ்வுக்கும் அவனது படைப்பினங்களுக்கும் இடையிலான தொடர்பை அறிவதற்கு

3. சமூகத்தில் ஒற்றுமை பேணப்படும்.

சமூகத்தில் கட்டுப்பாடு குலையாதிருத்தல்

பரஸ்பர உதவியின் அடிப்படையில் வாழ்வுக்கு வழியமைத்தல்

Education කල්වි අධ්‍යාපන

(2+3+5 = 10புள்ளி)

**06.**

1. ஏற்கனவே பெறப்பட்ட ஒரு தீர்வின் அடிப்படையில் புதிய ஒரு பிரச்சினையை ஒப்பு நோக்கி தீர்வு காண்பது கியாஸ் எனப்படும்.
2. மஸ்லஹா முர்ஸலா, உர்ப், கவ்லுஸ்ஸஹாபி, இஸ்திஸ்ஹாப், இஜ்மா, கியாஸ்
3. கோத்திர அமைப்பிலான சமூக அமைப்பு காணப்பட்டது.

குறைஷியர் உயர்ந்த கோத்திரமாக மதிக்கப்பட்டனர்.

“அஸபிய்யா” எனும் கோத்திர வெளி காணப்பட்டது.

சிறிய தவறுக்காக நீண்ட கால போர்கள் இடம் பெற்றன.

ஆண்கள் சிறுவயது முதல் போர் பயிற்சி பெற்றனர்.

(2+3+5 = 10புள்ளி)

**07.**

1. ஜாஹிலிய்யாக்கால மக்களிடம் காணப்பட்ட மோசமான நடத்தைகள்
   - I. கொலை
   - II. மது
   - III. வட்டி
   - IV. விபச்சாரம்
   - V. பழிக்குப்பழி

2. விறகு பொறுக்குதல்

   நூல் நூற்றல்

   உணவு சமைத்தல்

   நீர் சுமுந்து வருதல்

   பிள்ளைகளைப் பராமரித்தல்

3. உலகின் இறுதித்தூதர், வேறு நபி வரமாட்டார்கள் இதனால் பாதுகாக்கப்படுகிறது.

   நபியை ஏற்க மக்கள் அன்று முதல் இன்று வரை உள்ளனர்.

   நபியின் வரலாறு மிகச் சரியாக எழுதப்பட்டும் பாதுகாக்கப்பட்டும் வருகின்றமை

   நபியின் வரலாறு எல்லா மொழிகளிலும் எழுதப்பட்டுள்ளமை

   முஸ்லிம் அல்லாதவர்களும் நபியின் வரலாற்றை நூல்களாக எழுதியமை

(2+3+5 = 10புள்ளி)

kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp 075 287 1457